**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள்,**
**CC. 152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெயக்குமார் | வயது | : | 49 |
| த.பெ | : | திரு. ஏழைமுத்து | நிலை | : | **PW-7 (LW-12)** |

**A1 to A4 are called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

நான் தற்போது மாரியம்மன் கோயில்தெரு கீழ்பூவாணிக்குப்பத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். எதிரிகளை தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 3-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-ஆவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை சுமார் 15 வருடங்களுக்குமுன்பு புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் போட்டேன். அதை யார் எதற்காக வாங்கினார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.3-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-ஆவது சாட்சி கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.9** மற்றும் **அ.சா.ஆ.10**-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

சாட்சி மூர்த்தி எனது ஊரை சேர்ந்தவர். கடந்த 11-07-2012-ஆம் தேதி நானும் சாட்சி மூர்த்தி என்பவரும் ஆலப்பாக்கம் வரும்போது விக்னேஷ்வரா பால்டெக்னிக் அருகே புதுச்சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் இரவு 9 மணிக்கு இவ்வழக்கின் 3-ஆவது எதிரியை வழக்கிற்காக கைது செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி தானாக முன்வந்து இந்த வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல்

வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் கொடுத்தார் என்றால் சரியல்ல.அதன்பெயரில் புதுச்சத்திரம் காவல் ஆய்வளார் மேற்படி எதிரி ஆஜர் செய்த ரூ.1,20,000-த்தை கைப்பற்று மகஜரில் அன்றைய தினமே 23.00-23.30 மணிக்கு ஆலப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் மூர்த்தி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி இருந்தார். ஆனால் வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம்  18-ஆம் நாள்,**
**CC. 152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.03.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மூர்த்தி | வயது | : | 38 |
| த.பெ | : | திரு. ஆதிமூலம் | நிலை | : | **PW-8 (LW-13)** |

**A1 to A4 are called absent. Defence counsel filed petition u/s 317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -**

நான் தற்போது மாரியம்மன் கோயில்தெரு கீழ்பூவாணிக்குப்பத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். எதிரிகளை தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 3-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-ஆவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்படி கையொப்பங்களை சுமார் 15 வருடங்களுக்குமுன்பு புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் போட்டேன். அதை யார் எதற்காக வாங்கினார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. 3-ஆவது எதிாயின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-ஆவது சாட்சி கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.11** மற்றும் **அ.சா.ஆ.12**-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அ.சா.7 எனது  ஊரைச் சேர்ந்தவர். கடந்த 11-07-2012-ஆம் தேதி நானும் அ.சா.7-ம் ஆலப்பாக்கம் வரும்போது விக்னேஷ்வரா பால்டெக்னிக் அருகே புதுச்சத்திரம் காவல் நிலைய ஆய்வளார் இரவு 9 மணிக்கு இவ்வழக்கின் 3-ஆவது எதிரியை வழக்கிற்காக கைது செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி  தானாக முன்வந்து இந்த வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலத்தை

எங்கள் முன்னிலையில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன்பெயரில் புதுச்சத்திரம் காவல் ஆய்வளார் மேற்படி எதிரி ஆஜர் செய்த ரூ.1,20,000-த்தை கைப்பற்று மகஜரில் அன்றைய தினமே 23.00 -23.30 மணிக்கு ஆலப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் அ.சா.7-ம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** (எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி இருந்தார். ஆனால் வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**